செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Insitution under Ministry of Education, Government of India, New Delhi)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113

## கலை மற்றும் கட்டடக் கலைப் புலம்

நடத்தும்

# தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இசைக் கலையும் நாட்டியக் கலையும்

## பயிலரங்கம் - 8

**(06.10.2021 – 12.10.2021)**

## அறிவிப்பும் அழைப்பும்

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க் கூறுகளைக் கொண்ட தமிழ்மொழி, கலை வளங்கள் பெற்ற மொழியாகத் திகழ்கிறது. தமிழிலுள்ள கலைகள் அனைத்தும் வாழ்வின் ஒரு பகுதியாக இணைந்து, இயைந்து மானுடத்தைப் பண்படுத்தியுள்ளன.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இசைக் கலை செழிப்புற்றிருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. தொல்காப்பியத்தில் வரும் பாட்டு, வண்ணம் ஆகிய சொற்கள் இசைக் கலையுடன் தொடர்புற்றிருப்பது எண்ணுதற்குரியதாகும். பாட்டும் தொகையுமாகிய சங்க இலக்கிய நூல்களில் பண்கள், இசைக் கருவிகள், இசைக் கலைஞர்கள், இசைப் பாடல்கள் குறித்த குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சங்க காலத்திற்குப் பின் தமிழிசையானது பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வளர்ந்திருந்தாலும், சங்க கால இசையின் உயிர்த் தன்மைகள் இன்றும் தொடர்ந்து வந்துள்ளமை சிறப்புக்குரியதாகும்.

பழந்தமிழர்களின் இசைத் திறன் குறித்த நூல்கள் கிடைக்கப்பெறாவிட்டாலும், மிடற்றாலும், கருவிகளாலும் இசைத்தும் இசைக்கக் கேட்டும் இசைப் பயனை நுகர்ந்தமைக்குச் சங்க இலக்கியங்கள் வழியாகப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. இசையை அடிப்படையாகக் கொண்டு பாடற்கலையையும் ஆடற்கலையையும் பொழுதுபோக்காக மட்டுமன்றித் தொழிலாக அமைத்து வாழ்ந்ததனைச் செவ்வியல் இலக்கியங்கள் நன்குணர்த்துகின்றன. மிடற்றால் பாடும் ஆடவர் பாணர் என்றும்,

பெண்டிர் பாடினி என்றும் அழைக்கப்பெற்றனர். பாடியாடும் கலைஞருள் ஆடவர், கூத்தர், பொருநர் என்றும், பெண்டிர் கூத்தியர், விறலியர் என்றும் கூறப்பெற்றனர்.

இன்றைய இந்திய இசையானது கருநாடக இசை, இந்துஸ்தானி இசை எனும் இரு நிலைகளில் அமையப்பெற்றுள்ளது. இவற்றுள் கருநாடக இசை எனும் தென்னிந்தியச் செவ்விசைக்குப் பழந்தமிழ் இசையே அடிப்படையாக அமைவன என்பதைச் சங்க இலக்கிய நூல்களும், சிலப்பதிகாரக் காப்பியமும் சான்றளிக்கின்றன.

கடந்த அரைநூற்றாண்டு காலமாகத் தமிழ் இசைக் கலை குறித்த ஆய்வுகள் வளர்ச்சி பெற்று வருகின்றன. இந்த ஆய்வுகளின் வழியாகத் தமிழிசையின் பழமையும், சிறப்பும் ஆராயப்பட்டு அதன் தனித்துவமான சிறப்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றோடு நாம் நின்றுவிடாமல் இத்துறை சார்ந்து மேலும் பல பன்னோக்கு ஆய்வுகளை நிகழ்த்த வேண்டும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழிசையின் நுட்பம், மரபிசை முறை, தனித்தன்மை, வளர்ச்சி நிலை இவற்றுடன் நாட்டியக் கலையின் சிறப்புகள் ஆகியவற்றை ஆய்வு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் **தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இசைக் கலையும் நாட்டியக் கலையும்** எனும் பயிலரங்கினை நடத்தவுள்ளது. பயிற்றுரை, செயல்முறைப் பயிற்சி (ஆய்வு மாணவர்களுக்குச் சங்க இலக்கியப் பாடல்களை இசையுடன் கற்பித்தல்) என்ற இரு நிலைகளில் இப்பயிலரங்கம் நடைபெறும். ஆய்வு மாணவர்கள் மட்டும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம்.

ஆய்வு மாணவர்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் இசைத் துறை, நாட்டியத்துறை சார்ந்த அறிஞர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர். தமிழிசை ஆய்வுக் களத்தை வளப்படுத்தும் வகையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்குபெற்றுப் பயன்பெறுமாறு அழைக்கிறோம். .

இப்பயிலரங்கமானது 06.10.2021 முதல் 12.10.2021ஆம் நாள் முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது. பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 06.10.2021 முதல் 12.10.2021 முடிய 7 நாட்கள்.

3. பயிலரங்கு நேரம்: காலை: 10.00 - 01.00 & மாலை: 02.00 - 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopa@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 29.09.2021. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 30.09.2021 அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

## தமிழ்ச் செவ்விலக்கியங்களில் இசைக் கலையும் நாட்டியக் கலையும்

<u>பயிலரங்கம்</u>

**(06.10.2021 – 12.10.2021)**

நிழற்படம்

## விண்ணப்பப் படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பிறந்த நாள்/ வயது | | |
| 3. | பாலினம் | | |
| 4. | வகுப்பு (✓ செய்க) | | பொது [ ] இ.பி.வ. [ ] பட்டியல் இனத்தவர் [ ] |
| 5. | கல்வித் தகுதிகள் | | |
| 6. | முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ஆண்டு | | |
| 7. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |
| 8. | பல்கலைக்கழகம்/கல்லூரி/நிறுவன முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 10. | புலன எண் | | |

நாள் :

இடம்:

**(கையொப்பம்)**

நெறியாளர் /துறைத்தலைவர்/முதல்வர்/பதிவாளர்

உரிய முத்திரையுடன் கையொப்பம்